# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் “ஏ” தகுதி பெற்றது)

நாள் : 28.2.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக மேலாண்மையின் கீழ் செயல்படும் அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு அழகப்பா பல்கலைக் கழக அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்) மதிப்பீட்டில் புத்தகங்கள் மற்றும் அலமாரிகள் வழங்கும் விழா இன்று 28.02.2017 மாலை 4.30 மணியளவில் பள்ளி நூலக கட்டிடத்தில் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்களின் வழிகாட்டுதலின்படி பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிர்வாக பணியாளர்களிடமிருந்து நிதி திரட்டப்பட்டு அந்த நிதியிலிருந்து ரூபாய்.75000/- க்கு 900 புத்தகங்களும் ரூபாய்.25000/- க்கு அலமாரிகளும் வாங்கப்பெற்று துணைவேந்தர் அவர்களின் முன்னிலையில அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளிக்கு வழங்கப்பட்டது. மாணவர்கள் பயன் பெறும் வகையில் புத்தகங்களை வாங்கி கொடுத்த அழகப்பா பல்கலைக்கழக அலுவலர்கள் சங்க பொறுப்பாளர்களை பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் வெகுவாக பாராட்டி கவுரவித்தார். அப்போது பல்கலைக்கழக பதிவாளர் முனைவர்பேரா. வி.பாலச்சந்திரன், பள்ளி தலைமையாசிரியர் முனைவர் அருணாச்சலம், பள்ளி ஆசிரியர்கள் மற்றும்அழகப்பா பல்கலைக்கழக அலுவலர்கள் சங்கத்தினுடைய பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.



பேரா. வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)